தங்கமுருகன்
ஜுவல்லர்ஸ் A/C
267, மெயின்ரோடு நகைக்கடை பஜார், சங்கரன்கோவில்
97893 91528 - 96299 64324


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
DIGITAL MARKETING
WEB DEVELOPMENT
SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 292 | 15.04.2026 | WEDNESDAY | CHITHIRAI: 2 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 292 | 15.04.2026 | புதன்கிழமை | சித்திரை : 2 | விலை : ரூ.5/-

## மகளிர் இடஒதுக்கீடு

# "இனியும் தாமதம் கூடாது!"

## பிரதமர் மோடி பேச்சு

புதுடெல்லி: ஏப்.15-

நாடாளுமன்றம் உள்ளிட்ட மக்கள் மன்றத்தில் மகளிருக்கான இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையிலான அரசின் முனைப்பை நாடு முழுவதும் உள்ள பெண்கள் பாராட்டி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது: பல தசாப்தங்களாக நிலுவையில் இருந்து வந்த மகளிர் இடஒதுக்கீட்டை செயல்படுத்த அரசு உறுதியாக உள்ளது. 2029 ல் நடைபெறவுள்ள மக்களவை தேர்தல் மற்றும் அதையடுத்த மாநில சட்டமன்றத் தேர்தல்களில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதை உறுதி செய்யும் முடிவை, நாடு முழுவதும் உள்ள பெண்கள் பாராட்டி வருகின்றனர்.

அடுத்த இரண்டு நாட்களில் நாடாளுமன்ற சிறப்புக்கூட்டம் கூடவுள்ளது. இதில் பெண்களுக்கான இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையை கொண்டுள்ளேன். இது தொடர்பாக அவையில் விவாதிக்க உள்ளோம். வளர்ந்த பாரத கட்டமைப்பு சார்ந்த பங்களிப்புக்கான வாய்ப்பாக இதை பெண்கள் பார்க்கின்றனர்.

நம் தேசத்தின் பெண்கள் பல்வேறு துறைகளில் தங்களது தடத்தை பதித்து வருகின்றனர். இசை, இலக்கியம், கலை, சினிமா, விளையாட்டு, புத்தொழில் என சாதனை படைக்கின்றனர். அது இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உத்வேகம் அளிக்கிறது. இந்த துறைகளை போலவே மக்கள் மன்றத்திலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். இது தொடர்பான கருத்து பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது அதை அமல்படுத்தும் சூழல் உருவாகி உள்ளது. மகளிருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும்.

இந்த சட்டத்தை இயற்றுவதில் இனியும் தாமதம் ஏற்பட்டால் அது நம் தேச பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இந்த சட்டத்தை இயற்ற நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான பெண்களின் ஆசியை வேண்டுகிறேன். நீங்கள் அனைவரும் உங்களது உள்ளூர் எம்.பிக்களுக்கு வரலாற்று சிறப்புமிக்க இந்த நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கேற்குமாறு கோர வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## "மகளிருக்கான 33% இடஒதுக்கீட்டை ஸ்டாலினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை" : பழனிச்சாமி

திண்டுக்கல்: ஏப்.15-

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு கொடுக்கப்படுவதை ஸ்டாலினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி விமர்சித்துள்ளார்.



திண்டுக்கல்லில் நேற்று பிரச்சாரத்தை முடித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, நேற்றிரவு திண்டுக்கல்லில் உள்ள தனியார் ஹோட்டலில் தங்கினார். இன்று காலை அம்பேத்கர் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்தார். தொடர்ந்து கட்சி நிர்வாகிகளை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, மாலையில் தேனி மாவட்டத்தில் பிரச்சாரம் செய்ய புறப்பட்டார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த அவரிடம், நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் வேண்டுமென்றே கூட்டப்படுவதாக முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த எடப்பாடி பழனிச்சாமி, "தோல்வி பயத்தின் வெளிப்பாடு தான் அவர் கூறியுள்ளது. நாடாளுமன்றத்தை கூட்டுவது மத்தியில் உள்ள ஆட்சியாளர்கள். ஐந்து மாநிலத்தில் தான் தேர்தல் நடக்கிறது. மற்ற மாநிலங்களில் தேர்தல் இல்லை.

பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு என்பது நீண்டநாள் கோரிக்கை. அந்த கோரிக்கையை நிறைவேற்ற இப்பொழுது அருமையான தருணம். அதை அவரால்(ஸ்டாலினால்) பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்தில் கிடைப்பது, பெண்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்த ஒன்று. இன்று அது நிறைவேறும் சூழ்நிலை. அதை அவரால் ஜீரணிக்கமுடியவில்லை.

அதனால் அவரது கருத்தை ஊடகம் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். தேர்தல் தோல்வி பயத்தில் அவ்வாறு கூறுகிறார். மத்திய அரசு பெண்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக நாடாளுமன்றத்தைக் கூட்டியுள்ளது" என தெரிவித்தார்.

## "டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தது இபிஎஸ்தான்": அன்புமணி

கும்பகோணம்: ஏப்.15-

"டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தது இபிஎஸ் தான். இல்லையென்றால் திமுகவினர் மீத்தேன், ஹைட்ரோ கார்பன் போன்ற நிறுவனங்களைக் கொண்டு வந்து டெல்டாவை நாசப்படுத்தி இருப்பார்கள்" என பாமக தலைவர் அன்புமணி விமர்சித்துள்ளார்.



கும்பகோணம் காந்தி பூங்கா அருகில் கும்பகோணம் அசோக்குமார், பாபநாசம் துரை சண்முகபிரபு, திருவிடைமருதூர் இளமதி ஆகியோருக்கு வாக்கு கேட்க வந்த பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி, இன்று காலை சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழகத்தில் மிகவும் மோசமான திமுக ஆட்சி நடைபெறுகிறது. இந்த ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை, குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்கின்ற ஆட்சியாக திமுக ஆட்சி அமைந்துள்ளது.

பெண்கள், குழந்தைகள் மீதான வன்கொடுமைகள் பாலியல் தாக்குதல் அதிகரித்துள்ளது. நானும் டெல்டாகாரன் தான் என முதல்வர் மு.க.ஸ்டாலின் சொல்கிறார். இதுதான் உலகத்திலே மிகச்சிறந்த நகைச்சுவை. டெல்டாவில் விவசாயிகள் மிகவும் கஷ்டமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாவட்டத்திற்கு ஏற்ப ஏதோ ஒன்றை முதல்வர் பேசிக் கொண்டிருக்கிறார். முதல்வரை ஒரு பொம்மை போல வைத்துக் கொண்டு அவரை சுற்றி 4 பேர் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் பிரச்சினை என்னவென்று அவருக்கு தெரியவில்லை. அவரை சுற்றி உள்ள 4 வியாபாரிகள் பணத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகம் முழுவதும் திமுகவுக்கு எதிரான அலை வீசிக் கொண்டிருக்கிறது. அதிமுக கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று தமிழகத்தின் முதல்வராக பழனிசாமி ஆவார். 2021 தேர்தலுக்கு முன் தற்போதைய முதல்வர், 'நான் ஆட்சிக்கு வந்தவுடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து கும்பகோணத்தை தனியாக பிரிப்பேன்' என வாக்குறுதி அளித்தார். ஆனால் 5 ஆண்டு காலத்தில் அறிவிக்க வில்லை.

திமுக ஆட்சியில் ஒரு மாவட்டத்தை கூட பிரிக்கவில்லை. அரசு சேவைகளை பெறுவதற்கு கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் வரை பயணிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ரூ. 8 ஆயிரம் போலி கூப்பனை வழங்கி திமுகவினர் மக்களை முட்டாளாக்கி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழக மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தது இபிஎஸ் தான். இல்லையென்றால் திமுகவினர் மீத்தேன், ஹைட்ரோ கார்பன் போன்ற நிறுவனங்களைக் கொண்டு வந்து டெல்டாவை நாசப்படுத்தி இருப்பார்கள். முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விவசாயிகளின் கஷ்டம் பற்றி எதுவும் தெரியாது.

முதல்வர் மு.க.ஸ்டாலின், பழனிசாமியை தரம் தாழ்ந்து விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார். எங்களுக்கும், திமுகவை பற்றி, அவர்களின் குடும்பத்தை பற்றி பேச தெரியும். அப்படி பேசினால் அது தரம் தாழ்ந்து போகும் என்பதனால் நாங்கள் அமைதியாக இருக்கிறோம். திமுக 5 ஆண்டு காலம் ஆட்சி செய்த சாதனைகளை கூறி வாக்கு கேட்க துப்பு இல்லை. அவர்களுக்கு மக்கள் நிச்சயம் பாடம் கற்பிப்பார்கள் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து நேற்று மாலை, கும்பகோணம் காந்தி பூங்கா அருகில், கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் ஆகிய 3 தொகுதி அதிமுக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரமாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரித்தார்.

## சமயபுரம் மாரியம்மன் கோயில் சித்திரை தேரோட்டம் கோலாகலம்

திருச்சி: ஏப்.15-

பிரசித்தி பெற்ற சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் சித்திரை தேரோட்டம் இன்று கோலாகலமாக நடைபெற்றது.



சக்தி தலங்களில் முதன்மையாக விளங்கும் திருச்சி மாவட்டம், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் நிகழாண்டு சித்திரை தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

முன்னதாக இக்கோயிலில் சித்திரைப் பெருந்திருவிழா ஏப்.5 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து தினந்தோறும் பல்வேறு வாகனங்களில் அம்மன் வீதிஉலா வந்தார்.

விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் இன்று நடைபெற்றது. காலை 10.31 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் சிறப்பு அலங்காரத்தில் மேளதாளங்கள் முழங்க, வாண வேடிக்கைகளுடன் திருத்தேரில் அம்மன் எழுந்தருளினார். இதையடுத்து அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஓம் சக்தி பராசக்தி என்ற கோஷங்களுடன் திருத்தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

தேரோடும் வீதிகளில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டத்தின் நடுவே ஆடி அசைந்தபடி வலம் வந்த தேர் மாலை 4 மணியளவில் நிலையை அடைந்தது. தேரில் எழுந்தருளி காட்சியளித்த அம்மனை வழிநெடுக பக்தர்கள் பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர்.

தேர் திருவிழாவையொட்டி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் அலகு குத்தியும், அக்னி சட்டி ஏந்தியும், அம்மன் வேடம் பூண்டும், கரும்புத் தொட்டில் எடுத்து நடந்து வந்து அம்மனுக்கு நேர்த்திக் கடன் செலுத்தினர்.

ஆங்காங்கே பல்வேறு அமைப்புகள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம், குளிர்பானங்கள் வழங்கப்பட்டன.

பக்தர்கள் தங்குவதற்கு நிழற்பந்தல், குடிக்க, குளிக்க தண்ணீர் வசதி கோயில் நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டிருந்தது. தேர் திருவிழாவுக்காக பாதுகாப்பு பணியில் சுமார் ஆயிரம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர். குற்றச்சம்பவங்கள் நடைபெறுவதை கண்காணிக்க காவல்துறை சார்பில் முக்கிய இடங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தி கண்காணிக்கப்பட்டது.

சத்திரம், பஞ்சப்பூர், மத்திய பேருந்து நிலையங்களிலிருந்து சிறப்பு பேருந்து வசதி செய்யப்பட்டிருந்தது. சித்திரை தேர் திருவிழாவுக்கான ஏற்பாடுகளை சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் இணை ஆணையர் எம்.சூரியநாராயணன் தலைமையில் அறநிலையத்துறையினர் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

## தங்கம் விலை சவரனுக்கு ரூ.1280 அதிகரிப்பு

சென்னை: ஏப்.15-

சென்னையில் இன்று (ஏப்ரல் 14) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 1280 ரூபாய் அதிகரித்து ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 760 ரூபாய்க்கும், கிராமுக்கு 160 ரூபாய் உயர்ந்து, 14,220 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை, 22 காரட் ஆபரண தங்கம் கிராம், 14,100 ரூபாய்க்கும், சவரன், 1,12,800 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிலோவுக்கு, 265 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று, தங்கம் விலை கிராமுக்கு, 40 ரூபாய் குறைந்து, 14,060 ரூபாய்க்கு விற்பனையானது.

சவரனுக்கு, 320 ரூபாய் சரிவடைந்து, 1,12,480 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி கிராமுக்கு, ஐந்து ரூபாய் குறைந்து, 260 ரூபாய்க்கு விற்பனையானது. கிலோவுக்கு, 5,000 ரூபாய் சரிவடைந்து, 2.60 லட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.

இந்நிலையில் (ஏப்ரல் 14) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 1280 ரூபாய் அதிகரித்து ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 760 ரூபாய்க்கும், கிராமுக்கு 160 ரூபாய் உயர்ந்து, 14,220 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளியும் உயர்வு

வெள்ளி விலை கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து 265 ரூபாய்க்கும், கிலோவுக்கு 5 ஆயிரம் ரூபாய் அதிகரித்து 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



## டிபி சரவணன் சகோதரர் செந்தில் இல்ல விழாவில் அரசியல் திரைப்பிரபலங்கள் சங்கமம்

திசையன்விளை ஏப். 15-

திருநெல்வேலி மாவட்ட சக்கர வியூகம் நிருபரும், 'தமிழினி' திரைப்படத் தயாரிப்பாளருமான டிபி சரவணன் அவர்களின் சகோதரர் செந்தில் சுரேஷ்குமார் மகளான செல்வி தவசிகா அவர்களின் பூப்புனித நீராட்டு விழா திசையன்விளையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.*வாழ்த்து மழையில் தவசிகா:*இந்த மங்கல நிகழ்வில், முன்னாள் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினரும், பிரபல திரைப்படத் தயாரிப்பாளருமான மைக்கேல் ராயப்பன் நேரில் கலந்து கொண்டு, செல்வி தவசிகாவிற்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அவரைத் தொடர்ந்து பாஜக மாவட்டத் துணைத் தலைவர் உத்தரலிங்கம் உள்ளிட்ட அரசியல் மற்றும் சமூக அமைப்புகளைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் மணமக்களை வாழ்த்தினர்.*உற்சாக வரவேற்பு:*விழாவிற்கு வந்திருந்த உறவினர்கள் மற்றும் நண்பர்களை டிபி சரவணன் மற்றும் அவரது குடும்பத்தினர் இன்முகத்துடன் வரவேற்றனர். இந்த விழாவில் சித்ரா ட ஸ்டால் ராஜ், கரைசுத்துப்புதூர் ஜெயராஜ், மாரிமுத்து, பாலமுருகன், மகாராஜன் உட்படப் பலர் உடனிருந்து சிறப்பித்தனர். விழாவையொட்டி வந்திருந்த அனைவருக்கும் சிறப்பான விருந்து உபசரிப்பு செய்யப்பட்டிருந்தது.



■ தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சித்திரை திருநாளை முன்னிட்டு, ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளரும் தமிழக சட்டப்பேரவை சபாநாயகருமான மு.அப்பாவு, வள்ளியூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பொதுமக்களுடன் ஒருவராக வரிசையில் நின்று முருகப் பெருமானை வழிபட்டு சுவாமி தரிசனம் செய்தார்.




## சட்ட மாமேதையின் பிறந்தநாள்: சமூக நீதி காக்க உறுதியேற்ற திமுக வேட்பாளர் அப்பாவு

ராதாபுரம் ஏப். 15-

சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட பணகுடி மற்றும் வள்ளியூர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைகளுக்குச் திமுக வேட்பாளரும், தமிழக சட்டப்பேரவை சபாநாயகருமான மு. அப்பாவு மாலை அணிவித்து, மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினார். , இந்த நிகழ்வின் போது, நெல்லை கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ம. கிரகாம்பெல், உடன் இருந்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள், கூட்டணி கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு அண்ணல் அம்பேத்கரின் புகழைப் போற்றினர்.

பரப்புரையின் ஒரு பகுதியாக:ஏற்கனவே தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வரும் சபாநாயகர் அப்பாவு, அம்பேத்கரின் சிலைக்கு மரியாதை செலுத்தியதுடன், அங்கு கூடியிருந்த மக்களிடம் "திராவிட மாடல்" ஆட்சியில் முன்னெடுக்கப்படும் சமூக நீதித் திட்டங்கள் குறித்தும் உரையாற்றினார்.தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், சபாநாயகர் அப்பாவு, அம்பேத்கரின் சிலைக்கு மரியாதை செலுத்தியது, தலித் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் வாக்குகளைக் கவரும் ஒரு முக்கிய நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

## சிபிஐ வழக்கை ரத்து கோரும் லாலு பிரசாத் மனு தள்ளுபடி: உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஏப்.15-

கடந்த 20042009ம் ஆண்டில் காங்கிரஸ் தலைமையிலான ஐ.மு. கூட்டணி ஆட்சி செய்தபோது ரயில்வே அமைச்சராக லாலு பிரசாத் யாதவ் இருந்தார். அப்போது, நிலத்தை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு ரயில்வே துறையில் பலருக்கு வேலை அளித்ததாக லாலு பிரசாத் யாதவ், அவரது குடும்பத்தினருக்கு எதிராகச் சிபிஐ கடந்த 2022ம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி லாலு பிரசாத் யாதவ் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், என்.கே.சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. லாலு பிரசாத் சார்பில் மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் ஆஜராகி, ''வழக்கு தொடர அனுமதியில்லாமல் நடத்தப்பட்ட புலன்விசாரணை ஏற்புடைதல்ல. எனவே சிபிஐ வழக்கை ரத்து செய்ய வேண்டும்'' என்று வாதிட்டார்.இதற்குச் சிபிஐ தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி. ராஜு, ''இந்த வழக்குக்கு முன் அனுமதி தேவையில்லை'' என்று வாதிட்டார்.வழக்கு தொடர அனுமதி சார்ந்த விவகாரத்தை சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் எழுப்ப அனுமதித்த உச்ச நீதிமன்றம், லாலுவின் மேல்முறையீடு மனுவை தள்ளுபடி செய்தது.




## ”திருப்பரங்குன்றத்தை முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன்! கிருத்திகா தங்கப்பாண்டி வாக்கு சேகரிப்பு!

மதுரை ஏப். 15-

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் மதுரை தெற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி, தனது இரண்டாம் நாள் பிரச்சாரத்தை பல்வேறு பகுதிகளில் தீவிரமாக மேற்கொண்டார்.

திருப்பரங்குன்றம் கோயில் வாசல் முன்பாகப் பிரச்சாரத்தைத் தொடங்கிய அவர், சன்னதி தெரு, கிரிவலப்பாதை மற்றும் தென்பரங்குன்றம் பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று வாக்கு சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது: "திமுக ஆட்சியில் தான் திருப்பரங்குன்றம் கோயிலுக்குக் குடமுழுக்கு விழா சிறப்பாக நடத்தப்பட்டது. லட்சுமி தீர்த்த குளம் சீரமைக்கப்பட்டதுடன், புதிய சஷ்டி மண்டபம் மற்றும் கோயில் யானைக்கு மணிமண்டபம் கட்டிக் கொடுக்கப்பட்டது." அடுத்த கட்டமாகப் பக்தர்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருக்கும் திருப்பரங்குன்றம் மலைக்குச் செல்லும் ரோப் கார் பணிகள் விரைந்து நிறைவேற்றப்படும்."அதிமுக மீது விமர்சனம்:"எதிரணி வேட்பாளர் ஏற்கனவே இந்தத் தொகுதியில் வெற்றி பெற்றவர் தான். ஆனால், மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டார். என்னை வெற்றி பெறச் செய்தால், திருப்பரங்குன்றத்தை அனைத்து வசதிகளும் கொண்ட தன்னிறைவு பெற்ற முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன்" என உறுதி அளித்தார்.

வட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன், கருணாநிதி, மாமன்ற உறுப்பினர் கருப்புசாமி, கிருஷ்ணபாண்டி, எம் ஆர் பி ஆறுமுகம், ஜெயராமன், எஸ் கே வி சிவா, மாமன்ற உறுப்பினர்கள் ஸ்வேதா சுவிதா. விமல், சிவசக்தி ரமேஷ், மற்றும் பிஎன். எல், செல்வம், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் உடனிருந்தனர்.



## சத்தீஸ்கர் என்கவுன்ட்டரில் மாவோயிஸ்ட் பெண் தலைவர் உயிரிழப்பு

ராய்ப்பூர், ஏப்.15-

சத்தீஸ்கரின் பஸ்தார் பிராந்தியத்தில் உள்ள கார்கெர் மாவட்டத்தின் அடர்ந்த வனப் பகுதியில் ஆயுதம் ஏந்திய மாவோயிஸ்ட்கள் நடமாட்டம் இருப்பதாக போலீஸாருக்கு ரகசியத் தகவல்கள் கிடைத்தன.

இதன் அடிப்படையில் சோட்டேபெத்தியாபர்தாப்பூர் காவல் எல்லைக்குட்பட்ட வனப் பகுதியில் பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதில் மச்பள்ளி பகுதியில் பாதுகாப்புப் படையினரை நோக்கி மாவோயிஸ்ட்கள் துப்பாக்கியால் சுட்டதால் அங்கு இரு தரப்பிலும் கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலுக்கு பிறகு அப்பகுதியில் இருந்து பெண் மாவோயிஸ்ட் ஒருவரின் உடல் மீட்கப்பட்டது.



இவர் மாவோயிஸ்ட் பகுதிக்குழு உறுப்பினர் (ஏசிஎம்) அந்தஸ்து கொண்ட கமாண்டர் ரூபி என அடையாளம் காணப்பட்டார். மேலும் இவர் கடந்த ஆண்டு மன்பூர் மோஹ்லா மாவட்டத்தில் நடந்த என்கவுன்ட்டரில் கொல்லப்பட்ட 'தண்டகாரன்யா சிறப்பு மண்டலக் குழு தலைவர்' விஜய் ரெட்டியின் மனைவி ஆவார்.

சரண் அடையுமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தபோதிலும் ரூபி தீவிரமாக செயல்பட்டு வந்துள்ளார். பஸ்தாரில் எஞ்சியிருந்த கடைசி தெலுங்கு வம்சாவளி மாவோயிஸ்ட்களில் இவரும் ஒருவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரூபி கொல்லப்பட்டது பஸ்தாரில் மாவோயிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. ஏற்கெனவே பலவீனம் அடைந்துவரும் மாவோயிட்களை இது மேலும் பலவீனப்படுத்தும் என கருதப்படுகிறது.

கான்கெர் வனப் பகுதியில் சுமார் 10 மாவோயிஸ்ட்கள் தொடர்ந்து செயல்பட்டு வருவதாக பாதுகாப்பு படையினர் கருதுகின்றனர். அவர்களையும் பிடிக்க வனப் பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை மேற்கொண்டுள்ளனர்.



## தன்னை இயேசுவாக சித்தரிக்கும் ஏஜ படத்தை பதிவிட்ட ட்ரம்ப்

வாஷிங்டன் ஏப்.15-

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பற்றி விமர்சனம் செய்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அடுத்த சில மணி நேரங்களில், தன்னை இயேசுவாக சித்தரிக்கும் ஏஜ புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், நேற்று முன்தினம் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் 14ம் லியோ பற்றி செய்தியாளர்களிடமும் சமூக வலைதளங்களிலும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தார். தான் போப்பின் ரசிகர் அல்ல என்றும் அவர் சிறந்த முறையில் செயல்படவில்லை என்றும் கூறினார்.

மேலும் போப் மிகவும் தாராளவாதி என்றும் தீவிர இடதுசாரிகள் என்று அழைப்பவர்கள் மீது அதிக அனுதாபம் கொண்டவர் என்றும் குற்றம் சாட்டினார். குறிப்பாக அமெரிக்கா மற்றும் வெளியுறவுக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளில் அரசியல் வர்ணனை செய்வதை விடுத்து, போப் தனது ஆன்மிகக் கடமைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்த விமர்சனம் வெளிவந்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் உருவாக்கப்பட்ட தனது படத்தை சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டார். அதில் இயேசுவைப் போன்ற தோற்றத்தில் உள்ள அவர், விவிலிய காலத்து அற்புதத்தைச் செய்வது போல சித்தரிக்கப்பட்டிருந்தார்.

அந்த படத்தில், அவர் நீண்ட அங்கிகளை அணிந்து, நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதன் மீது தனது கையை வைத்திருப்பது போலவும், பார்வையாளர்கள் மரியாதையுடன் பார்த்துக் கொண்டிருக்க அவரது விரல்களிலிருந்து ஒளி வீசுவது போலவும் காட்டப்பட்டிருந்தது. இந்தத் தோற்றம், லாசரஸை இயேசு உயிர்த்தெழுப்பிய விவிலியக் கதையை எதிரொலித்தது.

அப்படத்தைச் சுற்றியுள்ள படங்களில் அமெரிக்கக் கொடிகள், ராணுவ விமானங்கள், பறக்கும் கழுகுகள் மற்றும் வானத்தில் தேவதூதர்களின் உருவங்கள் இடம்பெற்றிருந்தன. போப் பற்றிய விமர்சனத்துக்குப் பிறகு இந்தப் படம் வெளியானதால், இது விரைவாக மக்களின் கவனத்தை ஈர்த்தது.

முன்னதாக, ஈரானுடனான போர் சர்வ வல்லமை கொண்டவர் என்ற மாயையை உருவாக்கும் முயற்சி என்று போப் 14ம் லியோ விமர்சித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த ட்ரம்ப், எதிரி நாடுகள் அணு ஆயுதங்களைப் பெறுவதை நியாயப்படுத்தும் ஒரு மதத் தலைவரை விரும்பவில்லை என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டார்மங்கலத்தில் மாரியம்மனுக்கு பால்குடம் எடுத்து பக்தர்கள் நேர்த்திக்கடன்

### ஓம் சக்தி, பராசக்தி கோஷத்துடன் பக்தர்கள் பரவசம்

பாடாலூர், ஏப்.15-

சித்திரை முதல் நாள் தமிழ் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. அதன்படி, நேற்று தமிழ் ஆண்டான விசுவாவசு வருடம் முடிந்து ஸ்ரீ பராபவ வருடம் பிறந்தது. இதையொட்டி உலகம் முழுதும் உள்ள தமிழ் பேசும் மக்கள் தமிழ் புத்தாண்டை சிறப்பாக கொண்டாடினர். அதன்படி பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா நாட்டார்மங்கலம் கிராமத்தில் மாரியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆண்டு தோறும் சித்திரை மாதம் முதல் நாளான தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு பால்குடம் எடுத்து வழிபடுவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டு தமிழ் வருட பிறப்பான இன்று காலை பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி மாரியம்மன் கோயில் முன்பு தொடங்கியது.



அப்போது 100க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் பக்தர்கள் பால்குடம் எடுத்து முக்கிய வீதியின் வழியாக மாரியம்மன் கோயிலுக்கு வந்தடைந்தனர். பின்னர் மாரியம்மனுக்கு பக்தர்கள் கொண்டு வந்த பாலைக்கொண்டு பாலாபிஷேகம் செய்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். முன்னதாக அம்மனுக்கு 16 வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டு, தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இந்த விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நாட்டார்மங்கலம் கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர்

## முத்துப்பட்டி கம்மாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதே முதல் வேலை!” செல்லூர் ராஜூ அதிரடி வாக்குறுதி

மதுரை ஏப். 15-

மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ, முத்துப்பட்டி பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பிரச்சாரத்தின் போது பேசிய செல்லூர் ராஜூ, "முத்துப்பட்டி கம்மாயில் கழிவுநீர் கலப்பதைக் தடுத்து, வைகை ஆற்று நீர் மற்றும் மழைநீர் மட்டுமே சேரும் வகையில் நடவடிக்கை எடுப்பேன். கம்மாயைக் குடிமராமத்து செய்து, கரைகளை உயர்த்தி அழகுப்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும்" என உறுதி அளித்தார்.



திருப்பரங்குன்றம் தொகுதியை ஒட்டி அமைந்துள்ள வார்டுகளில் விடுபட்டுள்ள பாதாளச் சாக்கடை வசதிகள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்றும், பைகாரா மற்றும் அழகப்பன் நகரில் இருந்து மாட்டுத்தாவணி, ஆரப்பாளையம், பெரியார் பேருந்து நிலையங்களுக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

"முன்பு ஒருமுறை இப் பகுதியில் உள்ள கோயிலை அகற்ற முயன்றபோது, நான் அமைச்சராக இருந்ததால் தடுத்து நிறுத்தினேன். மீண்டும் வெற்றி பெற்றால் இக்கோயிலைப் புனரமைத்து, புதிய செட் அமைத்துக் கொடுப்பேன்" எனப் பழைய நினைவுகளைக் கூறி வாக்கு சேகரித்தார்.

முத்துப்பட்டி பகுதிக்கு வந்த வேட்பாளருக்குப் பொதுமக்கள் பூரண கும்ப மரியாதை அளித்தும், பெண்கள் ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர். நிகழ்வில் அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.



# எடப்பாடி பழனிசாமியை 'தற்குறி' என்று சொன்னது நினைவிருக்கிறதா?": சி.டி.ஆர். நிர்மல் குமார் விளாசல்

மதுரை ஏப். 15-

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி தவெக வேட்பாளர் சி.டி.ஆர். நிர்மல் குமார், தனக்கன்குளத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அதிமுக, திமுக மற்றும் பாஜக ஆகிய மூன்று கட்சிகளையும் கடுமையாகச் சாடினார்.

அண்ணாமலை மீது தாக்குதல்: "எடப்பாடி பழனிசாமியை 'தற்குறி' என்றும், 'தவழ்ந்து சென்று பதவி வாங்கியவர்' என்றும் விமர்சித்த அண்ணாமலை, இன்று தேர்தல் ஆதாயத்திற்காக 'அண்ணன் எடப்பாடி' என அழைக்கிறார். அவர் கையில் வைத்திருப்பதாகச் சொன்ன 'அதிமுக பைல்ஸ்' என்னவானது? ஆளுநரிடம் கொடுத்த பெட்டியில் ஒன்றும் இல்லை, அவர் ஒரு '420 மலை' என்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள்" எனச் சாடினார்.

அதிமுக பாஜக கூட்டணி: "தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவே அதிமுக இன்று மீண்டும் பாஜகவுடன் கைகோர்த்துள்ளது. எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவை மறந்து மோடி, அமித்ஷாவை ஏற்றுக்கொண்டதால் அதிமுக பல இடங்களில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது" என்றார்.

காங்கிரஸ் விமர்சனம்: கார்த்திக் சிதம்பரம் குடும்பத்திற்காக ஒட்டுமொத்த காங்கிரஸ் கட்சியையும் திமுகவிடம் சிதம்பரம் அடகு வைத்துவிட்டதாகக் கடுமையாகச் சாடினார்.

# திமுகவில் பிராமணர் சேர எதிர்ப்பு: டெல்லி பேரவைக்கு குண்டு மிரட்டல்




புதுடெல்லி, ஏப்.15-

டெல்லி சட்டப் பேரவையை ஆர்டிஎக்ஸ் வெடிகுண்டு மூலம் தகர்ப்போம் என மர்ம நபர்கள் இமெயில் மூலம் மிரட்டல் விடுத்துள்ளனர். டெல்லி சட்டப் பேரவை அலுவலகம் மற்றும் சபாநாயகர் விஜேந்திர குப்தாவுக்கு மர்ம நபர் ஒருவர் இமெயில் மூலம் மிரட்டல் விடுத்துள்ளார். முழுவதும் இந்தியில் அனுப்பப்பட்ட அந்த இமெயிலில் கூறியிருப்பதாவது:

பிராமணராக இருக்கும் எஸ்.வி.சேகர் திமுகவில் சேர்ந்துள்ளார். அவரை பாஜக.,வின் பிராமின் ஏஜென்டாக நீங்கள் அனுப்பியுள்ளீர்கள். அதனால்தான் டெல்லி சட்டப்பேரவையை நாங்கள் 15 ஆர்டிஎக்ஸ் குண்டுகள் மூலம் தகர்க்கப் போகிறோம். 3 மணி நேரத்துக்குள் இந்த தாக்குதல் நடத்தப்படும். அங்கிருந்து முஸ்லிம் ஊழியர்களை மட்டுமே வெளியேற்ற வேண்டும். திமுக.,வில் பிராமணர்கள் யாரும் இருக்கக் கூடாது. அவர்கள் திமுகவில் சேர்ந்தால் பெரியார் வாழ்க, அம்பேத்கர் வாழ்க என நிர்வாண நிலையில் கோஷமிட வேண்டும். அப்போதுதான் அவர்களை எங்களில் ஒருவராக நாங்கள் அனுமதிப்போம். இவ்வாறு அந்த இமெயிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி சட்டப்பேரவை வளாகத்துக்குள் விஜபி நுழைவு வாயிலை உடைத்துக் கொண்டு முகமூடி அணிந்த நபர் ஒருவர் காரில் கடந்த வாரம் நுழைந்து, சபாநாயகரின் காரில் பூங்கொத்தை வைத்து விட்டு சென்றார். அவரை போலீஸார் கைது செய்தனர். இந்நிலையில் இமெயில் மூலம் டெல்லி சட்டப்பேரவைக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. திமுகவில் பிராமணர்கள் சேர்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த மிரட்டல் விடுக்கப்பட்டதால், மிரட்டல் விடுத்தவர் தமிழகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# ஈரான் கச்சா எண்ணெய் கப்பல் இந்திய துறைமுகங்களில் நிறுத்தம்



புதுடெல்லி, ஏப்.15-

ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியை முடக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை மூடப்போவதாக ட்ரம்ப் கூறியுள்ளதன் எதிரொலியாக ஈரான் கச்சா எண்ணெயைச் சுமந்து வந்த 2 சரக்குக் கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களுக்கு அருகே நிறுத்தப்பட்டுள்ளன.கடந்த 2019ம் ஆண்டு முதல் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் ஈரானிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தி வைத்திருந்தது. இருப்பினும், மேற்கு ஆசியப் போர்ச் சூழலால் சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில், ஏற்கெனவே கப்பல்களில் ஏற்றப்பட்ட எண்ணெயை மட்டும் கொள்முதல் செய்ய கடந்த மாதம் அமெரிக்கா தற்காலிக விலக்கை இந்தியாவுக்கு அளித்தது. இதன் அடிப்படையில், ஈரான் உள்ளிட்ட நாடுகளிடமிருந்து எண்ணெய் வாங்கப் போவதாக உலகின் 3வது பெரிய நுகர்வு நாடான இந்தியா அறிவித்திருந்தது.

இதற்கிடையில், ஈரானுடனான அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், ஹார்முஸ் ஜலசந்தி வழியாக வரும் கப்பல்களை முற்றுகையிடப்போவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.இந்த அறிவிப்பு, இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட தற்காலிக விலக்கு மற்றும் தற்போதைய கொள்முதல் நடவடிக்கைகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த நிலையில்தான் கச்சா எண்ணெயைக் ஏற்றிக் கெண்டு வந்த இரு ஈரானிய கப்பல்கள் இந்தியாவில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

அதில் ஒன்றுதான் பெலிசிட்டி. தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்திற்குச் சொந்தமான இந்தக் கப்பல், 20 லட்சம் பேரல் கச்சா எண்ணெயுடன் ஞாயிற்றுக்கிழமை இரவு குஜராத்தின் சிக்கா துறைமுகத்திற்கு அருகே நங்கூரமிட்டது. இது மார்ச் மாத நடுப்பகுதியில் ஈரானின் கார்க் தீவிலிருந்து எண்ணெயை ஏற்றி வந்தது.

இரண்டாவதாக ஜெயா என்ற ஈரானிய கப்பல் ஒடிசாவின் பாரதீப் துறைமுகத்திற்கு அருகே நிறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்பே, பிப்ரவரி இறுதியில் இது 20 லட்சம் பேரல் எண்ணெயுடன் பயணத்தை தொடங்கியது. இந்தக் கப்பலின் உரிமையாளர் குறித்த விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. பொதுவாக ஈரானின் நிழல் கப்பல் வரிசையில் இது இடம்பெற்றுள்ளது.

பாரதீப் துறைமுகத்தை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் பயன்படுத்தி வருகிறது. சிக்கா துறைமுகத்தை ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் பாரத் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன. இரண்டு கப்பல்களில் உள்ள எண்ணெயை கொள்முதல் செய்தது எந்த நிறுவனம் என்பது குறித்து இதுவரை அதிகாரப்பூர்வ தகவல் இல்லை.

# கும்பகோணம் திமுகதவெக நிர்வாகிகள் மோதிக் கொண்டதால் பரபரப்பு



கும்பகோணம், ஏப்.15-

கும்பகோணத்தில் திமுகதவெக கட்சி நிர்வாகிகள் மோதிக் கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கும்பகோணம் தொகுதி வேட்பாளராக திமுக சார்பில் சாக்கோட்டை க.அன்பழகன், தமிழக வெற்றி கழகம் சார்பில் வினோத், தமாகா சார்பில் அசோக்குமார், நாம் தமிழர் கட்சி சார்பில் ஆனந்த் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இந்த நிலையில் கும்பகோணம், துக்காபாளையத்தெரு 17வது வார்டு பகுதியில் தமிழக வெற்றி கழகத்தினர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அதே வார்டில் திமுக சார்பில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டிருந்தவர்கள் ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பனை வழங்கியதாக கூறப்படுகிறது. அப்போது இது தொடர்பாக தவெகவினர் கேட்ட போது, இரு தரப்பினரிடையே மோதல் உருவாகி கைகலப்பானது. இதில் 17வது வார்டு திமுக செயலாளர் சபாபதி உள்பட 2 பேர், தமிழக வெற்றி கழக மாநகர செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் பலத்த காயமடைந்து கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக 2 கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் தேர்தல் நடத்தும் அலுலவரிடம் புகார் அளித்துள்ளனர்.

இதனிடையே, தவெகவினரை தாக்கிய திமுக மாநகர செயலாளர் சு.ப.தமிழழகனை கைது செய்ய வலியுறுத்தி காந்தி பூங்கா அருகில் தவெக வேட்பாளர வினோத் தலைமையில் அக்கட்சியினர் நிர்வாகி கழுத்தில் இருந்த தங்க செயினை திமுகவினர் பறித்ததால், அறுந்த தங்க செயினை காட்டி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், அந்த இடத்திற்கு வந்த கிழக்கு காவல் நிலைய போலீஸார், தவெகவினரிடம் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதால், தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடம் புகாரளிக்க வேண்டும் என கூறியதையடுத்து, தவெகவினர் போராட்டத்தை கைவிட்டு அந்த இடத்தில் இருந்து கலைந்து சென்றனர். இதனால் கும்பகோணத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக திமுக மாநகர செயலாளர் சுப.தமிழழகன் கூறியது: நாங்கள் திமுக திட்டங்கள் அச்சிட்ட துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கி வாக்கு சேகரித்துக்கொண்டிருந்த போது., தவெகவினர் அங்கு வந்து, அந்த துண்டு பிரசுரங்களை வழங்ககூடாது என கூறி எங்களிடம் தகராறு செய்ததால், கைகலப்பானது, இதில் எங்கள் கட்சியை சேர்ந்த 17வது வார்டு செயலாளர் சபாபதி, மாநகர இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன் ஆகிய 2 பேர் பலத்த காயமடைந்ததால் அவர்கள் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர், இது தொடர்பாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என புகாரளித்துள்ளேன் என்றார் அவர்,

இது தொடர்பாக தவெக வேட்பாளர் வினோத் கூறியது: துக்காம்பாளையத்தெருவில் வாக்கு சேகரித்துக்கொண்டிருந்த போது, அங்கு வந்த மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையிலான திமுகவினர், ரூ. 8 ஆயிரம் கூப்பன் வழங்கியதை தட்டிக்கேட்டோம். பின்னர், அந்தப் பகுதியில் உள்ளவர்களிடம், தவெகவினர் வந்தால் விரட்டியடியுங்கள் என்றதும், அங்கிருந்த பொதுமக்கள் எங்களிடம் தெரிவித்தனர். இது தொடர்பாக திமுகவினரிடம் கேட்ட போது, தள்ளு முள்ளு ஏற்பட்டு கைகலப்பாகி மோதலானது.

இதில் மாவட்ட பொருளாளர் விஜயசந்திரனின் தங்க செயினை அறுத்து, மாநகர செயலாளர் முருகானந்தத்தை தாக்கி பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொண்டனர். இதனால் அதிர்ச்சியடைந்த நாங்கள், திரண்டு, அங்கிருந்த ஊர்வலமாக புறப்பட்டு, காந்தி பூங்கா நால்ரோட்டில் சாலை மறியலில் ஈடுபட்டு, அறுத்த தங்க செயினை காட்டி, திமுக மாநகர செயலாளர் சு.ப.தமிழழகனை கைது செய்ய வேண்டும் என முழக்கமிட்டோம். பின்னர் போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மறியலை கைவிட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரிடம் புகாரளித்துள்ளோம் என்றார் அ வர்.




# தமிழகம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு முதல்வர் ஸ்டாலின் ஆட்சியே காரணம்: டி.ராஜா கருத்து

சென்னை, ஏப்.15-

தமிழகம் தற்போது பெற்றுள்ள வளர்ச்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியே காரணம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா தெரிவித்தார்.சென்னையில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து டி.ராஜா நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். சைதாபேட்டையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், கொளத்தூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

சைதாப்பேட்டை பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: சமத்துவம், சமூக நீதிக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தீவிரமான போராட்டத்தில் பாஜக மற்றும் அதனுடன் சேர்ந்திருப்பவர்களை வீழ்த்த நடைபெறும் தேர்தல் இது.

இந்தியா மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என கூறியவர் அம்பேத்கர், ஆனால், தற்போது பாஜகவின் செயல்பாடுகள் என்ன என்பது அனைவருக்கும் தெரியும்.பிரதமர் மோடி, அமைச்சர் பியூஷ் கோயல் ஆகியோர் தமிழகம் பின் தங்கியுள்ளதாக கூறுகின்றனர். இதுபற்றி கோயல் என்னுடன் விவாதிக்கத் தயாரா, எதில் தமிழகம் பின் தங்கியுள்ளது, கல்வி, மருத்துவம், வாழ்க்கை தரம் என அனைத்திலும் முதன்மை மாநிலமாக தமிழகம் உள்ளது.

மத்தியில் இருக்கும் ஆட்சி எல்லாருக்குமான ஆட்சி என்று சொல்லிக் கொள்கின்றனர். ஆனால், விவசாயிகள், ஏழைகளுக்கு எதிரான ஆட்சியாக அது உள்ளது.

அவர்களுடன் அதிமுக இங்கே அணி சேர்ந்து ஆதாரம் இல்லாத அவதூறுகளை பரப்பி வருகிறது. பழனிசாமி, தமிழகத்தின் கலாச்சாரம், உயர் மதிப்புகளை பாஜகவின் காலடியில் போட்டு வணங்கி வருகிறார்.

தமிழகம் தற்போது பெற்றுள்ள வளர்ச்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியே காரணம். மாநிலங்களின் நிதியை கொடுக்க மத்திய அரசு மறுக்கிறது, தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிப்பது போன்றவற்றை செய்து வருகிறது. மத்தியில் விரைவில் பாஜக ஆட்சி அகற்றப்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்



# உத்தரப்பிரதேசத்தில் தொழிலாளர்கள் போராட்டத்தில் வன்முறை

## போக்குவரத்து பாதிப்பால் பொதுமக்கள் அவதி

நொய்டா, ஏப்.15-

உத்தரப்பிரதேசத்தில் தனியார் தொழிற்சாலைகளை சேர்ந்த தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்ததால் பதற்றமான சூழல் நிலவியது. உத்தரப்பிரதேசத்தின் நொய்டாவின் பேஸ்2 மற்றும் செக்டார் 60ஆகிய பகுதிகளில் ஊதிய உயர்வு கோரி தொழிற்சாலை தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஊதிய மறுசீரமைப்பு கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. போராட்டக்காரர்கள் தேசிய நெடுஞ்சாலை 9 மறித்து போராட்டம் நடத்தினார்கள். இதில் வன்முறை வெடித்தது. இதில் வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டது. மேலும் கற்கள் வீசப்பட்டன. இதன் காரணமாக பதற்றமான சூழல் நிலவியது.

போராட்டக்காரர்கள் போக்குவரத்து இயக்கத்தை முடக்கியதால் காலை நேரத்தில் டெல்லிக்கு செல்லும் பல்வேறு சாலைகளில் ஆயிரக்கணக்கான பயணிகள் சிக்கித் தவித்தனர். டெல்லிநொய்டா எல்லையில் பல கிலோமீட்டர் தூரத்துக்கு வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன. இதனை தொடர்ந்து போலீசார் குவிக்கப்பட்டதை அடுத்து நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. வதந்திகளை நம்ப வேண்டாம் என்று பொதுமக்களுக்கு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இயல்பு நிலை படிப்படியாக மீட்டெடுக்கப்பட்டு வருவதாகவும் போலீசார் உறுதி அளித்துள்ளனர்

# "ஜி.கே.மூப்பனார் உயிருடன் இருந்திருந்தால் ஜி.கே.வாசனை அடித்திருப்பார்" ராமகிருஷ்ணன்



கும்பகோணம், ஏப்.15-

ஜி.கே.மூப்பனார் உயிருடன் இருந்திருந்தால் ஜி.கே.வாசனை அடித்திருப்பார் என மார்க்சிஸ்ட் மத்திய குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.மார்க்சிஸ்ட் மத்திய குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன், கும்பகோணம் தொகுதி திமுக வேட்பாளர் சாக்கோட்டை க.அன்பழகனுக்கு வாக்கு கேட்டு பேசியது: தமிழ்நாட்டில் நெல்லுக்கு ஊக்கத்தொகை வழங்ககூடாது என மத்திய அரசு அறிவித்துள்ளது. விவசாயம் நிறைந்த தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமாகா தலைவர் ஜி.கே.வாசன், கூட்டணியில் உள்ள பாஜகவிற்கு உங்களால் எப்படி தாமரைக்கு வாக்களிக்க முடியும்1989ம் ஆண்டு அப்போதைய முதல்வராக இருந்த கருணாநிதி, இலவச மின்சார திட்டத்தை கொண்டு வந்தார். ஆனால் மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய மின்சாரத் திட்டத்தால் இலவச மின்சாரம் இருக்காது, தனியாருக்கு போய் விடும். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்திற்கு வேட்டு வைக்கிறது பிரதமர் மோடி அரசு. நெல்லுக்கான ஊக்கத்தொகை வழங்கக் கூடாது, இலவச மின்சாரத்தை நிறுத்தும் பாஜகவின் சின்னமான தாமரை சின்னத்தில் ஜி.கே.வாசன் கட்சியினர் போட்டியிடுகின்றனர், குறைந்த பட்சம் அதிமுகவில் சின்னத்தை வாங்கி அந்த சின்னத்தில் போட்டியிட்டிருக்கலாம்.

ஜி.கே.மூப்பனார் உயிருடன் இருந்திருந்தால், ஜி.கே.வாசனை அடித்திருப்பார், இதை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார். தமாகாவை, பாஜகவிடம் அடகு வைத்திருக்கும் அந்த கட்சிக்கு வாக்கு அளிக்க முடியுமா.

எந்த மாநில அரசாலும், சட்டம் ஒழுங்கு பிரச்சனை வரும் போது 100 சதவீதம் வெற்றி பெற முடியாது. சாத்தான் குளத்தில் தந்தை, மகன் உயிரிழந்ததற்கு காரணம் மூச்சு திணறி உயிரிழந்ததாக பழனிசாமி கூறினார், ஆனால் அதற்கு காரணமான 9 பேருக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. அதனால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பற்றி பேசுவதற்கு அதிமுக பழனிசாமிக்கு அருகதை இல்லை. தூக்குக்குடி ஸ்டெல்லைட் பிரச்சனையில் ஏராளமானோர் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து பழனிசாமி, டிவியில் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றார். சட்டப்பேரவை தேர்தலுக்கு பிறகு அதிமுக காணாமல் போய்விடும். ஜி.கே.வாசன் கட்சி இல்லாமல் போய்விடும். தமிழகத்தை, தமிழக மக்களை, சமூக நீதியை, மதச்சார்பின்மையை பாதுகாக்க உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.சமூக நீதியை அழிக்க வரும் அதிமுக, பாஜகவிற்கு டெப்பாசிட் கூட கிடைக்கவிடாமல் தோற்கடிக்க வேண்டும். எனவே, கும்பகோணம் தொகுதியில் போட்டியிடும் சாக்கோட்டை க.அன்பழகனுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்கு அளித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்றார்.



■ இந்தியகுடியரசு கட்சி சார்பில் டாக்டர் பிஆர்.அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த தினம் அனுசரிக்கப்பட்டது. கடலூர் தலைமை தபால்நிலையம் அருகே உள்ள சட்ட மாமேதை டாக்டர் பிஆர்.அம்பேத்கர் அவர்களின் திருஉருவ சிலைக்கு கடலூர் மாவட்ட தலைவர் பாலவீரவேல் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட செயலாளர் தன வேலாயுதம், மாவட்ட பொருளாளர் சதீஷ்குமார், மாவட்ட துணை தலைவர்.ஆனந்தராஜ், மாவட்ட துணை செயலாளர் ராமலிங்கம், இகுக மீனம்பாள் பிரிவு மாநில தலைவர் கலிய வீரமணி, கடலூர் நகர நிர்வாகி சுரேஷ், குறிஞ்சிப்பாடி ஒன்றிய தலைவர் பழனிவேல் ஆகியோர் கலந்துகொண்டு அண்ணலின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



■ சங்கரன்கோவிலில் அதிமுக அதிரடி வேட்டை. வீடு வீடாக வாக்கு சேகரிப்பு: வேட்பாளர் திலீபன் ஜெய்சங்கரை ஆதரித்து, திருவுடையான் சாலை முதல் முப்புடாதி அம்மன் கோவில் வரை நகர்மன்றத் தலைவர் ராஜி (எ) கண்ணன் தீவிர பிரச்சாரம். கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட இளைஞர் அணியினர் புடைசூழ இரட்டை இலைக்கு வாக்கு சேகரிப்பு. நகர் மன்ற உறுப்பினர் முத்துலட்சுமி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பால் களைகட்டிய தேர்தல் களம்.



■ புளியங்குடி எஸ்.வி.சி சாய் நிகேதன் சிபிஎஸ்இ பள்ளியின் விழாவில் எஸ்.வி.சி கல்வி குழுமத்தின் தலைவர் டாக்டர் முருகையா, தங்கம் முருகையா ஆகியோர் தலைமை தாங்கினர். பள்ளி இயக்குநர் கலையரசன் முன்னிலை வகித்தார். மாணவி வர்ணிகா வரவேற்றார். பள்ளி முதல்வர் நாகலட்சுமி ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற இராஜபாளையம் சின்மயா வித்யாலயா பள்ளியின் முன்னாள் முதல்வர் உஷா பேசுகையில் மாணவர்கள் அனைவரும் கல்வியில் சிறந்து விளங்கினால் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்றார். விழாவில் மழலையர் பிரிவில் பள்ளி படிப்பை முடித்ததற்கான பட்டமளிப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் உயர்நிலைப் பிரிவில் கல்வி மற்றும் விளையாட்டு துறையில் சிறந்து விளங்கிய மாணவ மாணவிகளுக்குச் சான்றிதழ்கள், பதக்கங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாணவ மாணவிகளின் பரதநாட்டியம், நடனம், நாடகம், கீபோர்டு வாசித்தல் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர் கலாதரன் நன்றியுரை வழங்கினார். விழாவில் பள்ளி ஆசிரியர் ஆசிரியைகள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ மாணவியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



■ உடுமலை நகரம் 26 27 வார்டுகளில் வர்த்தக அணி மாவட்ட செயலாளர் உதயகுமார் அவர்கள் உடுமலை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு இரட்டை இலை சின்னத்திற்கு வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். உடன். ஜெயச்சந்திரன், சாய்ராம், அபி நாகராஜ், முருகன் மற்றும் வார்டு நிர்வாகிகள், கூட்டணி கட்சி பொறுப்பாளர்களுடன் இணைந்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள்.



■ தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சித்திரை முதல் தேதியை முன்னிட்டு, அருள்மிகு ஞானாதீஸ்வரர் சிவகாமி அம்பாள் திருக்கோவிலில் புத்தாண்டு 'விசு' கனி தரிசனம் மற்றும் சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். குறிப்பாக அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் மற்றும் கும்பாபிஷேகம் பக்திப் பரவசத்துடன் நடைபெற்றது.



# “திசையன்விளை ராதாபுரத்தில் தவெக தேர்தல் அலுவலகம் திறப்பு!

திசையன்விளை ஏப். 15-

நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திசையன்விளையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பணி அலுவலகத் திறப்பு விழா நடைபெற்றது.தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் அவர்களின் ஆலோசனையின் பேரில், தேர்தல் பணிகளை முடுக்கிவிடும் நோக்கில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. கட்சியின் மாவட்ட இணைச் செயலாளர் காட்வின் பிரசாத் தலைமை தாங்கி, புதிய தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.இந்நிகழ்வில் திசையன்விளை நகரச் செயலாளர் கில்லிராஜா, மாவட்ட இணை அமைப்பாளர் வழக்கறிஞர் குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் சுதன், மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மேலும், மாவட்ட மீனவர்அணி அமைப்பாளர் வியகுலம், மாவட்ட மகளிர் அணி தலைவி கிருஷ்ணவேணி, ஒன்றிய உறுப்பினர் சேர்க்கை அணி அமைப்பாளர் ஜெயா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் கலையரசி, மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் அபிநயா, மகளிரணி இணை அமைப்பாளர் டயானா, மீனவர் அணி துணை அமைப்பாளர் விஜிலியா, ஒன்றிய அமைப்பாளர் சரண்யா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# “சேலம் ஐயப்பா ஆசிரமத்தில் சித்திரை விஷு” கனி தரிசனம்! ஒரு ரூபாய் நாணயத்துடன் ‘கைநீட்டம்

சேலம் ஏப். 15-

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, சேலம் சாஸ்தா நகரில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஐயப்பா ஆசிரமத்தில் சித்திரை விஷு கனி தரிசன விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.அதிகாலை 4:30 மணிக்கு நடை திறக்கப்பட்டு, கணபதி ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து 5:00 மணிக்கு ஐயப்ப சுவாமிக்குக் கனி வர்க்கங்கள் மற்றும் நவதானியங்கள் படைக்கப்பட்டு 'கனி தரிசனம்' மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. தரிசனத்திற்கு வந்த பக்தர்கள் அனைவருக்கும் ஆசிரம நிர்வாகிகள் சார்பில் 'கைநீட்ட



காணிக்கையாக' புதிய ஒரு ரூபாய் நாணயமும், லட்டு பிரசாதமும் வழங்கப்பட்டது.புத்தாண்டு விழாவையொட்டி, ஆசிரமத்திற்கு வந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குக் காலை முதல் இரவு வரை தொடர்ச்சியாக அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஐயப்பா ஆசிரம நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மிகச்சிறப்பாகச் செய்திருந்தனர்.

# மே.வங்கத்தில் வெற்றியை தீர்மானிக்கும் 70 தொகுதிகள்

புதுடெல்லி, ஏப்.15-

மேற்கு வங்கத்தில் ஆட்சி அமைக்கப் போவது யார் என்பதை சுமார் 70 தொகுதிகள் தீர்மானிக்கும் எனக் கருதப்படுகிறது. இந்த தொகுதிகளில் கடந்த தேர்தல்களில் பதிவான வெற்றிதோல்வி வாக்கு வித்தியாசத்தை விட, தற்போது வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகமாக இருப்பது இதற்கு காரணமாக கூறப்படுகிறது.

மொத்தம் 294 உறுப்பினர்களை கொண்ட மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் வழக்கத்துக்கு மாறாக இந்தமுறை, வெற்றிதோல்வியை எஸ்ஐஆர் (வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம்) ஏற்படுத்திய பாதிப்பு நிர்ணயிக்கும் வாய்ப்புகள் உள்ளன. மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் காரணமாக சுமார் 70 தொகுதிகள் அதிக வாக்காளர்களை இழந்துள்ளன. இந்த 70ல் நந்திகிராம், பவானிபூர் போன்ற முக்கியத் தொகுதிகளும் அடங்கும். மேலும், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் 'மத்துவா' சமூகத்தினர் அதிகம் வசிக்கும் பகுதிகளும் முர்ஷிதாபாத்,



மால்டா மாவட்டங்களில் முஸ்லிம் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளும் அடங்கும்.

கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் இந்த தொகுதிகளில் வெற்றிதோல்வி வாக்கு வித்தியாசம் 8,000 முதல் 15,000 வாக்குகளுக்குள் இருந்தன. 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் இப்பகுதிகளில் பல எம்எல்ஏக்கள் வெறும் 1,000 முதல் 8,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தனர்.

ஆனால் தற்போது, இந்த தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களில் இருந்து ஆயிரக்கணக்கானோர் நீக்கப்பட்டுள்ளதால் மாநிலத்தில் ஆட்சி அமைப்பது யார் என்பதை இத் தொகுதிகள் தீர்மானிக்கும் என கருதப்படுகிறது.

எனினும் கடந்த 2021 தேர்தலை விட இம்முறை மிகப் பெரிய வெற்றியைப் பெறுவோம் என்று முதல்வர் மம்தா பானர்ஜி நம்பிக்கை தெரிவிக்கிறார். மறுபுறம், கடந்த தேர்தலில் பாஜக 77 தொகுதிகளில் வெற்றி பெற்றதாகவும், ஆனால் இம்முறை அந்த எண்ணிக்கை 170 ஐ தாண்டும் என்றும் மத்திய அமைச்சர் அமித் ஷா கூறுகிறார். திரிணமூல், பாஜக ஆகிய இரு கட்சிகளும் கடும் போட்டி நிலவும் ஒவ்வொரு தொகுதியிலும் தீவிரமாகப் போராடி வருகின்றன.

கடந்த ஏப்ரல் 7ம் தேதி நிலவரப்படி, மேற்கு வங்கம் முழுவதும் வாக்காளர் பட்டியல்களில் இருந்து 90.83 லட்சத்துக்கும் அதிகமான பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

அதாவது, கடந்த அக்டோபர் வரை இருந்த மொத்த வாக்காளர்களில் 11.85 சதவீதத்தினர் தற்போது நீக்கப்பட்டுள்ளனர். இதில் 'பரிசீலனையில் உள்ளவை' என்ற பிரிவின் கீழ் மட்டும் 27.83 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.



# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள்

## படத்திற்கு மாலை அணிவித்து விஜய் மரியாதை

சென்னை, ஏப்.15-

அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி அவரின் படத்திற்கு மாலை அணிவித்து விஜய் மரியாதை செய்த விஜய் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:Rail Freight

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சமத்துவம், சம உரிமை, சமூக நீதி, ஜனநாயகம் ஆகியவற்றை நிலைநிறுத்தியவர். வலுவான அடித்தளம் அமைத்து, எளியவர்களுக்கும் அதிகாரம் கிடைக்கப் பாடுபட்டவர். நம் கொள்கைத் தலைவர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் இன்று. அவரது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினேன். நம் கொள்கைத் தலைவரின் பிறந்தநாளில், சமத்துவ சமுதாயம் அமைக்கும் லட்சியப் பாதையில் பயணிப்போம். மக்கள் விரும்பும் மக்களாட்சியை அமைக்க உறுதியேற்போம். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் தென் மாவட்டங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற திசையன்விளை சுடலை ஆண்டவர் திருக்கோவிலில் சித்திரை திருநாளான தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஸ்ரீ சுடலை ஆண்டவர் ராஜா தோரணையில் காட்சி அளித்தார்.



# விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தேர்தல் அறிக்கையை சென்னை அலுவலகத்தில் வெளியிட்டார் திருமாவளவன்

சென்னை, ஏப்.15-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தேர்தல் அறிக்கையை சென்னை அலுவலகத்தில் வெளியிட்டார் திருமாவளவன். விலையில்லா கல்வி, இருமொழிக் கொள்கை உள்ளிட்ட 15 கருப்பொருள்களை கொண்ட அறிக்கை வெளியீடு. சிறுபான்மையினரைக் காக்க சிறப்புச் சட்டம். மக்கள்தொகைக்கேற்ப இட ஒதுக்கீடு. உழுபவருக்கு நிலம், இருப்பவருக்கு இடம்










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000